ARTICLE 08 · கட்டுரை 08 | நவீன இலக்கியம்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 52–58

# பாரதிக்கு மட்டும் ஏன்?

*Why Only Bharati?*

**முனைவர் கு. விமலாரமணி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சிராப்பள்ளி – 620 019

***Dr. K. Vimalaramani**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Kattur, Tiruchirappalli – 620 019*

**மின்னஞ்சல்:** vimalaramani2016@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

உலக மொழிகளுக்குத் தாயாக விளங்கும் தமிழில், காலந்தோறும் புதுமைகளைப் புகுத்தி மொழிக்கு வளம் சேர்த்த பெருமை பாரதியாரையே சாரும். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய சமூகத்தில், தன் கவிதைகளின் வழியே விடுதலை வேட்கையை ஊட்டியவர் பாரதி. பண்டிதர்களுக்கு மட்டுமே புரிந்த தமிழைக் கைவிட்டு, எளிய மக்களும் உணரும் வகையில் எளிய நடை, எளிய சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தினார். ஆன்மீகம், தேசியம் ஆகியவற்றைத் தாண்டி, சமூகம், பெண்ணுரிமை, சாதி ஒழிப்பு எனப் பல்வேறு சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைத் தன் படைப்புகளில் விதைத்தார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்றவற்றின் மூலம் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய வடிவத்தையும் அழகியலையும் தந்து பெருமை சேர்த்தார். பாமர மக்களும் இலக்கியம் படைக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தந்து, தமிழ் கவிதை உலகில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். பழைய மரபுக் கவிதைகளின் இலக்கணப் பிடியிலிருந்து விடுபட்டு, புதுக்கவிதைக்கு வித்திட்ட முன்னோடியாக அவர் திகழ்கிறார். சாதி, மதப் பிரிவினைகளைக் கடந்து 'மனித நேயமே' பிரதானம் என்பதைத் தன் கவிதை வரிகளின் மூலம் உரக்கச் சொன்னார். உலகளாவிய சிந்தனைகளைத் தமிழிலும், தமிழின் சிறப்பை உலகிற்கும் கொண்டு சேர்த்த பல்கலை அறிஞராக விளங்கினார். தாய்த்தமிழின் பெருமையைப் பாடியதோடு, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என உலகிற்குப் பறைசாற்றினார். சமகாலக் கவிஞர்களிடமிருந்து வேறுபட்டு, தன் வாழ்க்கையையும் கவிதையையும் ஒன்றாகக் கலந்த உன்னத வாழ்வு வாழ்ந்தவர் பாரதி. சுருக்கமாகக் கூறின், தமிழ் மொழியின் பழமையைக் காத்து, அதை இக்காலத்திற்கு ஏற்ப நவீனப்படுத்தியதே பாரதிக்குத் தனிச்சிறப்பு கிடைக்கக் காரணமாகும்.

**திறவுச்சொற்கள்:** பாரதி; தமிழ்; சமூக நீதி; விடுதலை வேட்கை; தமிழ்ப் பற்று

## Abstract

Bharathiyar holds the pride of enriching Tamil—a language that stands as the mother of world languages—by introducing innovations across eras. At the beginning of the last century, when the Indian society was enslaved, Bharathi ignited the longing for freedom through his poems. Moving away from Tamil that was understood only by scholars, he used a simple style and simple words so that common people could also understand. Beyond spirituality and nationalism, he sowed various social reform ideas in his works, such as social justice, women's rights, and the abolition of caste. He brought new forms and aesthetics to Tamil literature through masterpieces like Kannan Pattu and Kuyil Pattu. He instilled confidence that common folks could also create literature, sparking a new renaissance in the world of Tamil poetry. Breaking free from the grammatical constraints of traditional classical poetry, he stands as a pioneer who laid the foundation for modern free verse (Puthukkavithai). Transcending the divisions of caste and religion, he loudly proclaimed through his poetic lines that 'humanism' is paramount. He was a versatile scholar who

brought global thoughts into Tamil and took the glory of Tamil to the world. While singing the praises of mother Tamil, he proclaimed to the world, "Of all the languages I know, I see none as sweet as Tamil." Differing from contemporary poets, Bharathi lived a noble life where he blended his personal life and his poetry into one. In short, protecting the antiquity of the Tamil language while modernising it to suit contemporary times is what brought unique distinction to Bharathi.

**Keywords:** Bharathi; Tamil; Social Justice; Aspiration for Freedom; Tamil Devotion

## முன்னுரை

உலகின்கண் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. பேசப்படும் அனைத்து மொழிகளுக்கும் எழுத்து வடிவமும் இலக்கிய வடிவமும் இருப்பதாகச் சொல்ல முடியாது. சிலநூறு மொழிகளுக்கு மட்டுமே இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. அத்தகைய மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் தலைமைப் பண்பும் கொண்டது நம் தாய்மொழியாகிய தமிழ். அந்தத் தமிழுக்குத் தங்களது கவிதைகளால் பெருமை சேர்த்த புலவர்கள் எண்ணிலங்காதர்கள் உண்டு. சங்க காலம் தொடங்கி இன்றுவரை அத்தகைய கவிவாணர்கள் காலம் தோன்றி பெருமை சேர்த்த மொழி தமிழாகும். அவர்களின் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து வளம் சேர்த்தவர்களால் பாரதிக்குத் தனிச் சிறப்புண்டு. அதற்கான காரண காரியங்களை ஆய்வு செய்வதே இக்கரையின் நோக்கமாகும்.

## பாரதி பற்றிப் பாரதிதாசனார்

ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவனது காலமும் ஒரு காரணமாகும். அதை ஒட்டியே பாரதியின் காலமும் அவரது உயர்வுக்குக் காரணமாகிறது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வசீகரமான விடியற்காலம் ஒன்று வரும். அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்பவனே அதிஷ்டசாலியாளி. ஆனால் உழைப்பாளிகள் அதிருஷ்டத்தை நம்புவதில்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்னேறிவிடுகிறான். இதுதான் பாரதியின் நிலை. பாரதியைப் பற்றிப் பாரதிதாசன் பாடும்பொது புதுநெறி நாட்டிய புலவன் என்ற தலைப்பில்,

தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்தால்
இமைதிற வாமால் இருந்த நிலையில்
தமிழகம் தமிழுக்கு தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.
பைந்த தமிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்!இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில்நீக்கப் பாடி வந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன், நாட்டிற்
படரும் சாதிப் படக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்வன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
(பாரதிதாசன், புதுநெறி காட்டிய புலவன்)

எனவே பாரதிப் பிறந்த காலச் சூழலைப் பார்த்தோம். ஆனால் இதே காலக்கட்டத்தில் தோன்றிய பலர் நமக்குத் தெரியாமலே இருந்திருக்கின்றனர்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. திருச்சி மாநகரத்தில் வாழ்ந்தவர். உ.வே.சாமிநாதையரின் ஆசிரியர். சாமிநாதையர் தமிழ் இலக்கியங்களைத் தேடியலைந்து பதிப்பித்தவர். அவர் இல்லையெனில் இத்துனைத் தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கிடைத்திருக்க மாட்டா. அகமென்றால் அறுநூறு இம்மென்றால் இருநூறும் பாடும் ஆற்றல் பெற்றவர். இவரைப் பற்றித் திருச்சியில் இருப்பவர்களுக்கே தெரிவதில்லை. காரணம், இவர் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இன்று மக்கள் எல்லோரும் அறிந்திருக்கிறவர்கள் மூன்று துறையில் இருக்கிறவர்கள்தான். ஒன்று அரசியலில் இருக்க வேண்டும். இரண்டு திரைத்துறையில் இருக்கின்றவர்கள். மூன்று கிரிக்கெட் விளையாட்டில் இருப்பவர்கள். இவர்களை மக்கள் அறிந்திருப்பது ஏன், மக்கள்விரும்புகின்ற துறையில் இருப்பதுதான் இதற்குக் காரணமாகும்.

## விடுதலை வேட்கைக் காலம்

பாரதி வாழ்ந்த காலம் விடுதலை இயக்கம் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் கொழுந்து விட்டெறிந்த காலம். அதில் பாரதி தன்னை இணைத்துக் கொண்டதுதான் அவரது தேடலின் உயர்வு.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுங் சோரா திருத்தல் – உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றுஞ் செய்

(பாரதியார் கவிதைகள், பக்.217)

நாட்டிற்குழைப்பதை மேன்மையாக் கருதிய காரணத்தால் விடுதலையில் தன்னை இணைத்துக் கொண்டார். இது தான் பாரதியின் பரந்த பார்வையும் உயர்ந்த பார்வையுமாகும். இது தான் பாரதியின் புகழுக்கும் உயர்வுக்கும் காரணமாக அமைகின்றது. இதே காலத்தில் வாழ்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை தலபுராணங்கள் பாடுவதிலும், பக்தி வழியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொணடவர். அதனைக் குறையாகக் கருதமுடியாது. வாழும் உலகில் வளம் காண நினைத்தவர் பாரதி. பிள்ளையவர்கள் செல்லும் தேயத்துக்கு உறுதுணைத்தேடியவர். ஒருவருடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவரவர் தெரிந்தெடுத்துக் கொள்ளும் வாழ்வியல் நெறிகளே காரணமாகின்றன என்பதற்குப் பாரதியின் வாழ்க்கை ஒரு சான்றாகும்.

## கவிஞனின் இலக்கணம்

மனிதர்கள் சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகிறர்கள் என்பது உண்மையாகும். இதனைத்தான் சூழ்நிலை இயலார்களும் வற்புறுத்துகிறார்கள். தகுந்த சூழ்நிலைகளை அமைத்துக் கொடுத்தால் எப்படிப்பட்ட மனிதர்களையும் உருவாக்கிவிடலாம். ஆனால் எப்படிப்பட்ட சூழ்நிலைகளை அமைத்துக் கொடுத்தாலும் ஒரு கவிஞனை உருவாக்கமுடியாது. அவன் பிறவியிலேயே உருவாக வேண்டும். ‘Poet is born’ என்று சொல்வார்கள் பல பிறவிகளில் கற்றதன் பயனாகவும். அனுபவம் காரணமாகவும் கவிஞன் உருவாகிறான். இதைத்தான் வள்ளுவரும்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

(குறள் 398)

என்பார். எனவே ஒரு கவிஞன் இயற்கைத் தாயின் மடியில் பலபிறவிகளில் தாலாட்டப் பட்டிருக்க வேண்டும். அவனுக்கு இளமை முதுமை என்பது கிடையாது இரவு பகல் என்பதும் கிடையாது. இயற்கை என்னும் சுரங்கத்தில் கற்பனை என்னும் கருவியைக் கொண்டு அறிவு என்னும் வைரத்தை வெட்டியெடுக்கிறான். பாரதி வாழ்ந்த காலம் 33 ஆண்டுகள். ஆனாலும் யுகக் கவிஞன் என்று பாராட்டப்படுகிறார்.

## பாரதி பயணித்த பாதைகள்

பாரதி தன் காலத்தில் கண்ட நிகழ்வுகள் அனைத்தையும் தன் கவிதைக் கிரணங்களால் ஒளிபாச்சியிருக்கிறார். நாட்டைப்போற்ற வேண்டும்.

வந்தே மாதரம் என்போம் – எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

(பாரதியார் கவிதைகள். தேசிய கீதங்கள். தொகுதி.1, பக்.59)

ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறுகுலத்தின ராயினும் ஒன்றே

(பாரதியார் கவிதைகள். நாட்டு வணக்கம் பக்.59)

## தமிழ்

எந்தையும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே

(மேலது பக்.52)

## தமிழ்

சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லியவால் அமிழ்தென்போம்

(மேலது ப.க59)

தமிழ்நாட்டைப் பாடும்போது,

வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு – நல்ல்
காதல் புரியும் அரம்பையர்போல் – இளங்
கண்ணியர் சூழ்ந்த தமிழ்நாடு

(மேலது, பக்.188)

மொழிபற்றி,

புத்தம் புதிய கலைகள் –பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேண்மைக் கலைகள் தமிழினில் இல்லை

(மேலது. பக். 101)

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

(மேலது, பக்.106)

## தோத்திரப் பாடல்கள்

கடமை யாவன தன்னைக் கட்டுதல்
பிறந்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய் வேலுடைந் மௌனாய்
நாராயணனாய் நதிச்சடை முடியானாய்

(மேலது, பக்.206)

காக்கைச் சிறகினிலே நந்தலாலா – நின்றன்
கரியநிறந் தோன்று தையெ நந்தலாலா

(மேலது, பக்.315)

காலா! உனைநான் சிறுபுல்லென மதிக்கிறேன். என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மதிகிகிறேன் – அட (காலா)

(மேலது, பக்.385)

## அறிவே தெய்வம்

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையம் அறிவிலிகாள்! – பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்
டாகுமெனல் கேளீரோ?

(மேலது, பக்.388, 389)

## புதிய ஆத்திசூடி

கேட்டிலும் துணிந்துநில

(மேலது, பக்.419)

## பாப்பா பாட்டு

உயிர்களிடத்தில் அன்பு வேணும்! தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேண்டும்
வயிர முடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா!

(மேலது, பக்.431)

## சுய சரிதையில்

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர், பின்
கார்கொள் வானிலொர் மீனலை தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்நதிருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சென்று வாரெட் டுணைப்பயன் கண்டிலார்

(பாரதியார் கவிதைகள், சுயசரிதை. பக்.529-530)

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீடினுள்ளே கிணற்றொ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின் றாரே

(மேலது, பக்.569)

மேலும் கண்ணன் பாட்டில்,

வானமழை நீ யெனக்கு வண்மையில் நானுனக்கு
பான மடிநீ யெனக்கு பண்டமடி நானுனக்கு
ஞான வொளிவீ சுதடி நங்கை நின்றன் சொதிமுகம்
ஊனமறு நல்லுழ்கே! ஊறுசுவையே! கண்ணம்மா

(மேலது, பக்.694)

பாஞ்சாலி சபதம் பாரதியின் படைப்புகளுள் சிற்நத ஒன்றாகும். இதில் பாண்டவர்கள் அத்தினாபுரத்தில் அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அரண்மனைக்குக் கிளம்பும்போது உள்ள நிலைமையை விளக்கும் பாடல்,

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும் ச்றெறும்பால் யானை சாகும்
வரிவகுத்த உடற்புலியைப் புழுவுங் கொல்லும்
வருங்கால முன்னோரும் மயங்கி நிற்பார்
சிரிவகுத்து ஓடையிலே மிதந்து செல்லும்
கீழ்மேலாம் மேல்கீழாம் கிழக்கு மேற்காம்
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவர், விதிவகுத்த போழ்தினன்றே

(பாஞ்சாலி சபதம், மேலது. பக்.774)

பாரதியின் படைப்பில் உள்ளம் விம்மிதமுறச் செய்யும் படைப்பு குயில்பாட்டு அதில் குயில்தன் வரலாற்றைக் கூறும் பகுதியாய் வருமிடத்தில்,

கானப் பறவை கலககலெனும் ஓசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி ஓவியினிமலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
நிலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊரிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்குங்
கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

(மேலது, பக்.874, 875 )

இங்ஙனம் இயற்கைப் பாட்டையும், செயற்கைப் பாட்டையும் சேர்ததுப் பாடும்போது நாமும் அவரோடு சேர்ந்து கிறங்கிப் போகின்றோம்.

## முடிவுரை

பாரதி இந்தக் கவியுகத்தில் பிறந்த கற்பகக் கவிஞன். அவன் தரணியின் எந்த இடத்திலிருந்து பாடினாலும், ஆகாயத்தில் ஆயிரமாயிர அடிகளுக்கு அப்பால் கொண்டுபோய் விட்டாலும், சமுத்திரத்தின் அடியாழத்தில் கொண்டு நிறுத்தினாலும் அவன் கொண்டகருத்தினும், கொள்கையிலும் அச்சமின்றிப் பாடும் ஆற்றல்மிகு கவிஞன்தான் பாரதி. அவனையும் தமிழ்த்தாய் தன் மானங்காத்தாள். தமிழர்தம் வீரங் காத்தனர். இவரைப்போல் ஒரு கவிஞன் தமிழ் மண்ணில் தோன்றுவானா என்பது பெரும்பாடுதான். வாழ்க பாரதியின் தமிழும், தமிழ்நாடும்.

## துணைநூற் பட்டியல்


1. பாரதிதாசன் கவிதைகள் (முழுவதும்), மணிவாசககர் பதிப்பகம். சென்னை 600001.
2. பாரதியார் கவிதைகள், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17.
3. திருக்குறள், வானதி பதிப்பம், தி.நகர், சென்னை - 600017.


## References


1. Bharathidasan Kavithaigal (Complete), Manivasagar Pathippagam, Chennai – 600001.
2. Bharathiyar Kavithaigal, Varthamanan Pathippagam, T. Nagar, Chennai – 600017.
3. Thirukkural, Vanathi Pathippagam, T. Nagar, Chennai – 600017.